Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 304

சனிக்கிழமை
27 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## கருங்குளவி கொட்டி மூதாட்டி உயிரிழப்பு!

யாழ்பாணம், செப். 27
கருங்குளவிக் கொட்டுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த மூதாட்டியொருவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்

11

# திலீபனின் நினைவில் மூழ்கியது தாயகம்!



## ஆயிரக்கணக்கான மக்கள் திரள்வு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 27
இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 12 நாள்கள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்துறந்த தியாகதீபம் திலீபனின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயகத்தில் நேற்றுப் பரவலாக முன்னெடுக்கப்பட்டது.

11

### தியாகதீபம் திலீபனின்

## நினைவேந்தலுக்குச் செல்ல சபையால் அனுமதி மறுப்பு

### வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள் வலி.தெற்கு பிரதேசசபையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 27
யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் நடைபெற்ற தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்குச் செல்வதற்கு சபை அனுமதி மறுத்த நிலையில், உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்து அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர். வலிகாமம் தெற்கு பிரதேச

11

## காங்கேசன் துறைமுக அபிவிருத்தி; இறுதி முடிவுகள் எட்டப்படவில்லை!

### அடிப்படை அபிவிருத்திகளே மேற்கொள்ளப்படும் அமைச்சர் பிமல் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 27
காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் இதுவரை எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.
அத்துடன் அந்தத் துறைமுகத்தில் அடிப்படை அபிவிருத்திப் பணிகளே மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

11

## திடீர் சுகவீனம் சிசு உயிரிழப்பு

யாழ்பாணம், செப். 27
பிறந்து 4 மாதமேயான சிசுவொன்று திடீர் சுகவீனம் ஏற்பட்டு நேற்று

11

### வவுனியா வடக்கில்

## தமிழர்களின் காணிகளை ஆக்கிரமிக்க மீண்டும் சதி

### ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு



வவுனியா, செப். 27
வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தமிழர்களின் பூர்வீகக் காணிகள் மற்றும் பழமைவாய்ந்த தமிழ்க் கிராமங்கள் ஆகியவற்றை ஆக்கிரமிக்கும் வகையில், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால்

11

## கடற்றொழிலுக்குச் சென்ற சிறுவன் திடீர் சுகவீனமுற்று உயிரிழப்பு!

யாழ்பாணம், செப். 27
யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில் கடற்றொழிலுக்காக (களங்கட்டி மீன்பிடி) உதவிக்குச் சென்ற சிறுவன், கடலுக்குள் மயங்கமடைந்து பின்னர் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.
ஆனைக்கோட்டை - சாவல்கட்டுப் பகுதியைச் சேர்ந்த,

11



### முச்சந்தி முரளி

'அடுத்த எலக்சனுக்குத்தான் இனிமேல் உவையள் அபிவிருத்தி பற்றி கதைப்பினம் கண்டியளோ'

### திருநெல்வேலியில்

## வர்த்தக நிலையம் உடைப்பு; நான்கு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 27
யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்று நேற்றுமுன்தினம் உடைக்கப்பட்டு

11

## சத்திரசிகிச்சைக்குட்பட்ட இளம்தாய் உயிரிழப்பு!

யாழ்பாணம், செப். 27
மலம் வெளியேறுவதற்காக வைக்கப்பட்ட குழாயை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையைத் தொடர்ந்து, இளம் தாயார் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

11

### பிரசவத்தின்போது சுகவீனம்;

## உயிரிழந்த இரணையரின் தாயாரும் நேற்றுச் சாவு!

யாழ்பாணம், செப். 27
பிரசவத்தின்போது உயிரிழந்த இரட்டைக் குழந்தைகளின் தாயார், தொடர்ச்சியாக தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று அவர் உயிரிழந்தார்.

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 26.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4206
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள்
08 25 49 66
விசேட எழுத்து J

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 26.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1273
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
05 25 29 60

**NLB ஜய**
திகதி 26.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0232
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள்
7 4 8 1

**மெகா பவர்**
திகதி 26.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2312
ஆங்கில எழுத்து S
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள்
15 37 59 77

**மஹஜன சம்பத**
திகதி 26.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5964
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள்
5 1 5 1 3 4

**தன நிதானய**
திகதி 26.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1994
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள்
31 34 41 75
விசேட எழுத்து R

**அத சம்பத**
திகதி 26.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0539
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள்
5 1 3 4

**சுப தவசக்**
திகதி 26.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0080
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள்
23 30 41 48

# பலஸ்தீனத்துக்கு உருகும் அநுர தமிழர்களைக் கண்டுகொள்ளார்

## சாடுகின்றார் சிறிதுங்க ஜெயசூரிய

**யாழ்ப்பாணம், செப்.27**

**பலஸ்தீனத்தை ஆதரித்து ஐக்கிய நாடுகள் சபையில் கருத்துக்கூறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்பில் அலட்டிக் கொள்ளமாட்டார். ஏனெனில் அவர் ஓர் இனவாதக் குடும்பத்தின் பின்னணியில் வந்தவர் என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய அநுர அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களுக்கு நிகரானது என்பதை நிரூபித்துவருகின்றது. தேர்தல் மேடைகளில் கூறியவற்றை மறந்து மக்களைத் திசைதிருப்பித் தங்களின் ஆட்சியைக் கொண்டுசெல்லவே பாடுபடுகின்றது.

அநுர ஒரு சந்தர்ப்பவாதி. அமெரிக்காவின் நிகழ்ச்சிநிரலிலிருந்து நாட்டைச் சீரழிக்கும் ஒருவர். அமெரிக்கா என்ன நினைக்கின்றதோ அதையே நாட்டில் முன்னெடுத்துவருகின்றார். சர்வாதிகாரம் கொண்ட அநுரவுக்கு நாட்டில் புரையோடிக்கொண்டிருக்கும் அரசியல் பிரச்சினையைத் தீர்க்க ஒரு கையொப்பம் போதும். ஆனால் அதை அவர் செய்யமாட்டார்.

யாழ்ப்பாண மக்களுக்கு சர்வதேச மைதானம் தேவையாக இருந்தாலும், அதைவிட அவசியமானவை எண்ணற்ற அளவில் உள்ளன. ஆனால் அநுர அரசாங்கம் மைதானத்தைக் காட்டித் தமிழ் மக்களின் பிரச்சினைகளை மூடிமறைக்க முயல்கின்றது.

மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் சதித் திட்டத்தை முன்னெடுக்கின்றது. அதை முறியடிக்கவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கப்படவேண்டும், அனைத்து அரசியற் கைதிகளையும் விடுதலை செய்ய அநுர அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். வடக்கு கடற்றொழில் சமூகத்தினரின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும். சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தேசியப் பிரச்சினையை இந்த அரசாங்கம் தீர்க்க முயற்சிக்கவேண்டும் - என்றார். (எ-66)

**சுபிரி தன சம்பத**
திகதி 26.09.2025
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0672
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 0 5 7 4 9 9

**Super Ball**
திகதி 26.09.2025
தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2938
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கம் 24 25 27 65

**சனிதா**
திகதி 26.09.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கம் 45 54 57 60
வெற்றி வாரம் 5099

**SASIRI**
திகதி 26.09.2025
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0778
வெற்றி இலக்கம் 09 42 45

**லக்ன ராசி**
திகதி 26.09.2025
தினம் வெள்ளிக்கிழமை
கடகம்
வெற்றி இலக்கம் 05 23 31 40
சீட்டிழுப்பு வாரம் 4650

**KAPRUKA**
திகதி 26.09.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கம் 01 25 56 68
வெற்றி வாரம் 2114

**அத கோடிபதி**
திகதி 26.09.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம் 08 45 47 62
வெற்றி வாரம் 2764



# சிறுவர் துஷ்பிரயோகம்; அடம்பனில் வீதி நாடகம்

மன்னார், செப்.27

சிறுவர்களைப் பாதுகாக்கும் நோக்கோடு சீயோன் திருச்சபையின் போவாஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்றுமுன்தினம் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அடம்பன் மற்றும் ஆண்டாங்குளப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இதில் போவாஸ் நிலையத்தின் பங்காளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மாந்தை மேற்குப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (ச-56)


# முகமூடி அணிந்தோரால் வாள்வெட்டுத் தாக்குதல்


## புத்தூரில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.27

முகமூடி அணிந்த இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தநிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சமப்வம் சாவகச்சேரி புத்தூர் வீதி கனகன்புளியடிச் சந்திப்பகுதியில் அண்மையில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு தப்பிச் சென்ற சந்தேகநபர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ச-41-131)





# ஐ.நா. பொதுச்செயலருடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு!

கொழும்பு, செப்.27

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குடெரெஸ்ஸை சந்தித்தார்.

சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இலங்கையின் புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் குறித்தும், நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட முக்கியமான அரசாங்கத்தின் முன்முயற்சிகள் குறித்தும் விளக்கினார். (ச-இ)

# மூளாய் சைவப்பிரகாச வித்தியில் கழிவகற்றல் தொகுதி திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், செப்.27

யாழ்ப்பாணம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நேற்று திண்மக் கழிவகற்றல் தொகுதி திறந்துவைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர் ஜெ.ஜெயச்சந்திரன், எழுக மூளாய் மறுமலர்ச்சி மையத்தின் பிரதிநிதி ப.புருசோத்தமன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தத் திண்மக் கழிவகற்றல் தொகுதிக்கு எழுக மூளாய் மறுமலர்ச்சி மன்றம் நிதி அனுசரணை வழங்கியது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துநகர் காணி அபகரிப்புக்கு 10 நாள்களுக்குள் தீர்வு கிட்டும்

## பிரதமர் அலுவலகம் உறுதி


**திருகோணமலை, செப்.27**

**திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முத்துநகர் விவசாயக் காணி அபகரிப்பு விடயம் தொடர்பில் எதிர்வரும் 10 நாள்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று பிரதமர் அலுவலகம் உறுதியளித்துள்ளது.**

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முத்துநகர் பிரதேசத்தில் பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி சுமார் 800 ஏக்கர் விவசாயக் காணி சூரிய மின்சக்தித் திட்டத்துக்காக அரசாங்கத்தால் இந்தியத் தனியார் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. காணி அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தமது விளை நிலங்களை தமக்கு வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியும்கடந்தபுதன்கிழமை முத்து நகர் விவசாயிகள் கொழும்பில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 12 மணித்தியாலங்கள் பிரதமர் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பிரதமர் அலுவலக அதிகாரிகளுக்கும் இடையே அன்று இரவு சந்திப்பொன்று நடைபெற்றது. தங்களின் பிரச்சினைகள் தொடர்பான மனுவைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அதிகாரிகளிடம் கையளித்தனர்.

விவசாயக் காணி அபகரிப்பு விடயம் தொடர்பில் எதிர்வரும் 10 நாள்களுக்குள் தீர்வு வழங்கப்படும் என்று அவர்களுக்குப் பிரதமர் அலுவலகம் உறுதியளித்துள்ளது. (எ-இ)



# மரக்குற்றிகளுடன் வாகனம் விபத்து!

## சாரதி மாயம்

வவுனியா, செப்.27

வவுனியா புதுக்குளம் பகுதிக்கு அருகாமையில் முதிரைக்குற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானநிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. குறித்த வாகனத்தில் இருந்து 11 முதிரைக்குற்றிகளைப் பொலிஸார் கைப்பற்றினர்.

வாகனத்தின் சாரதி தலைமறைவாகியுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-110)

# யாழ்.வணிகர் கழக புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.27

யாழ்.வணிகர் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை யாழ்.வணிகர் கழகப்பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக இ.ஜனக்குமார், உப தலைவராக இ.ஜெயராசா, செயலாளராக ச.சிவகுமரன், உப செயலாளராக சு.சுதர்சன், பொருளாளராக ந.ஜெயமோகன் மற்றும் 16 நிர்வாகசபை உறுப்பினர்கள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-41)



## மீசாலையில் டெங்குக் கட்டுப்பாடு

# 18 இடங்களுக்கு சிவப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 27

தென்மராட்சிப் பிரதேச மீசாலையில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் 18 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதால் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் மீசாலை கிராம அலுவலர் பிரிவில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

இதில் 404 இடங்களில் தரிசிப்பு இடம்பெற்ற நிலையில் 139 இடங்கள் நுளம்பு பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டன. அத்துடன் 18 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதால் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டது. (ச-25,9)

# மரம் முறிந்து வீழ்ந்ததில் குப்பிளானில் வீடு சேதம்



யாழ்ப்பாணம், செப்.27

கடும் காற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் குப்பிளான் பகுதியிலுள்ள வீடொன்றின்மீது பனை மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் வீடு சேதத்துக்குள்ளாகியுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன் வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரும் சேதமடைந்துள்ளது. இதனால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-27,17)




# நீதிக்கண்ணீரில்லை நீலிக்கண்ணீர்

**என்னதான் ஆடு நனையுதெண்டு ஐ.நா.வில நிண்டு ஓநாய் அழுதாலும், கடைசியில அது நீதிக்கண்ணீரில்லை நீலிக் கண்ணீர் எண்டது எல்லாருக்கும் நல்லாவே விளங்கும். எங்கேயோ இருக்கிற பலஸ்தீனில சனங்கள் கொத்துக் கொத்தாக்கொல்லுப்படுறதுக்காக கண்ணீர் விட்டு கசிந்துருகி, அப்பிடியே அவையைத் தனிநாடா ஏற்றுக்கொள்ளுற அறிவிப்பை வெளியிடேக்க அநுரவுக்கு மனச்சாட்சி கொஞ்சமெண்டாலும் குத்தியிருக்காதோ எண்டதுதான் கனபேரின்ர கேள்வி.காஸாவைவிட இஞ்சநடந்த அட்டூழியங்களையெல்லாம் "போர்க்குற்றமெண்டு அதுகளைச் சொல்லேலாது" எண்டு புறங்கையால ஒதுக்கிப் போட்டு, காணாமல் ஆக்கப்பட்டவைக்கு என்ன நடந்தது எண்டு சொல்ல வக்கில்லாமல் இருந்துகொண்டு, ஐ.நா.வில போய் பலஸ்தீனத்தை அங்கீகரிக்க எப்பிடித்தான் உவருக்கு மனம் வந்ததோ தெரியேலை.**

**என்னதான் உவையள் உலகம் முழுக்க புரண்டு "நாங்கள் மாற்றம் செய்ய வந்தனாங்கள், நீதிக்குக் குரல் குடுப்பம்" எண்டு சொல்லிக்கொண்டாலும், உள்ளுக்கால பழைய அதே இனவாத அரசாங்கங்கள் மாதிரித்தான் நடந்து கொள்ளுகினம். அதுக்கு இப்ப சொல்லப்போற சம்பவம் நல்ல உதாரணம். ஒவ்வொரு வருசமும் இலக்கியப் புத்தகங்களுக்கு சாகித்திய விருது அரசாங்கம் குடுக்கிறது. சிறுகதை, கவிதை, ஆராய்ச்சி, நாவல், அப்பிடி இப்பிடியெண்டு இலக்கியத்தில இருக்கிற துறையள் ஒவ்வொண்டிலையும் வந்த நல்ல புத்தகங்களை செலக்ட் பண்ணித்தான் இந்தச் சாகித்திய விருது குடுப்பினம். இலங்கையில இலக்கியத்துக்கு குடுக்கிற உச்ச விருது இந்த விருதுதான். இந்த விருதை வாங்கிறதுக்கு எழுத்தாளர்மார் போட்டிபோடுவினம். அதுக்காக அவை தாங்கள் எழுதின புத்தகங்களோட, புத்தசாசன கலாசார அமைச்சுக்கு விண்ணப்பிக்கவேணும். அப்பிடி விண்ணப்பிச்சாத்தான் விருது குடுப்பினம். ஆனால் இந்த நடைமுறைக்கு விதிவிலக்கா, நோர்வேயில புலம்பெயர்ந்து இருக்கிற ஒரு தமிழ் எழுத்தாளர், விருதுக்கு விண்ணப்பிக்காமல் அவருக்கு அரசாங்கம் தானே வலியவந்து "இந்தமுறை உங்கட புத்தகத்துக்கு சாகித்திய விருது தந்தால் வாங்குவிங்களோ?" எண்டு கேட்டிருக்குதாம்.**

**அப்பிடி அரசாங்கமே வலியப்போய் விருது வழங்க நினைக்கிற அளவுக்கு அவர் என்ன புத்தகம் எழுதினவர்? வேற ஒண்டுமில்லை, கடைசியாச் சிங்களத்தில வந்த மகாவம்சத்தை தமிழில மொழிபெயர்த்ததுக்குத்தான் அந்த விருதைக் குடுப்பமெண்டு அரசாங்கம் நினைச்சிருக்கு. காலத்துக்கு காலம் இஞ்ச நடக்கிற விசயங்களை மகாவம்சத்தில சேர்த்துக்கொண்டு வருவினம், அப்பிடி கடைசியா வந்த மகாவம்சத்தில, தமிழரின்ர போராட்டம் பயங்கரவாதம் எண்டும், இனப்பிரச்சினையை பிரிவினைவாதம் எண்டும், யாழ்ப்பாணம் நூலகத்தை தமிழர்கள்தான் கொளுத்தினவை என்டும் கண்ணைமூடிக்கொண்டு எழுதியிருக்கினம். இப்பிடி எங்கட வரலாற்றை மகாவம்சத்தில எப்பிடியெல்லாம் திரிச்சு எழுதியிருக்கினம் எண்டு காட்டுறதுக்காக நோர்வேயில இருக்கிற சரவணன் எண்ட எழுத்தாளர் தமிழில மொழிபெயர்த்தவர். ஆனால் அவர் தங்களுக்கு சப்போர்ட்டாத்தான் மொழிபெயர்த்திருக்கிறார் எண்டு நினைச்சுத்தான் அரசாங்கம் அவருக்கு விருது குடுக்க நினைச்சவ. எண்டாலும் அந்த எழுத்தாளர் "இப்பிடிப்பட்ட [illegible] ஒண்டுக்காக எனக்கு விருது [illegible] ச்சால் அதைவிட அவமானம் வேற ஒண்டுமில்லை" எண்டு ஒரேயடியாச் [illegible]லிப்போட்டார். இப்பிடி மகாவம்சத்தில எங்கட வரலாற்றை மாத்தி எழுதி, அதை எங்களிட்டையே பரப்பி, காலம் முழுக்க எங்களை அடிமையா வைச்சிருக்கிற நினைக்கிறவை பலஸ்தீனத்துக்காக ஒப்பாரி வைக்கிறது புதினம்தான் கண்டியளோ.**

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணிச்சுமை சற்று அதிகரிக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** பரபரப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புண்டு. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** உடல் நலனில் கவனம் தேவை. கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் குறைவாகவே கிடைக்கும். எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம்.

**மீனம்:** ஆதாயகரமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.



# தியாகதீபம் திலீபனுக்கு அராலியில் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப்.27

இலங்கை தமிழரசுக் கட்சி வட்டுக்கோட்டை கிளையின் ஏற்பாட்டில் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு அராலி செந்தமிழ் சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, தியாகதீபத்தின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் ஆற்றப்பட்டன. இறுதியாக நினைவேந்தலில் கலந்துகொண்ட அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டன.


நிகழ்வில் வலி. மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர் ச. சயந்தன், உபதவிசாளர் க. இலங்கேஷ்வரன், வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், வலி. மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,27)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், செப்.27

மருத்துவமனை இரத்த வங்கிகளில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 9மணி முதல் மாலை 3மணி வரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம், கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து விதையனைத்தும் விருட்சமே எனும் செயற்றிட்டத்தினூடாக இந்த இரத்ததான முகாமை ஏற்பாடுசெய்துள்ளன. ஆர்வமுடைய தன்னார்வக் குருதிக்கொடையாளர்கள் மேலதிக தகவல்களுக்கு 077 324 1755எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-27,66)



தியாகதீபம் திலீபனின் 38ஆவது நினைவுதின இறுதிநாளான நேற்று தீவக நினைவேந்தல் குழுவினரால் வேலணை வங்களாவடி பொது நினைவிடத்தில் நினைவுகூர்ந்து அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில் யாழ். மாநகர முன்னாள் முதல்வர் மணிவண்ணன், மாநகரின் முன்னாள் உறுப்பினர் பார்த்தீபன், தமிழரசுக் கட்சியின் மறைந்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன், வேலணைப் பிரதேச சபையின் உபதவிசாளர் வசந்தகுமாரன், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-27)

# தேசியமட்ட புத்தாக்கப்போட்டி வவுனியா மாணவி முதலிடம்

வவுனியா, செப்.27

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான ரோபோத் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கப்போட்டியில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மேகவர்சனா சுபாஸ்கரன் 'சுகாதாரமும் மருத்துவமும் புத்தாக்கம்' எனும் பிரிவில் தேசியரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இந்தப்போட்டி கொழும்பு அபெக்கம பத்திரமுல வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ச)



# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப்.27

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகியகால மனிதவள முகாமைத்துவக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் 16 வயதிற்கு மேற்பட்டவராகவும், க.பொ.த. சாதாரண தரத்தில் முதலாம்மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கமுடியும் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-41)

# சிறுவர்களுக்கான விழுமிய வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப்.27

எதிர்காலத்தின் தூண்களான சிறுவர்களுக்கு நல்ல பண்புகள், அறநெறிகள் மற்றும் விழுமியங்களை விதைக்கும் வகையில் சிறுவர்களுக்கான விழுமிய வகுப்பு வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மு.ப.11 மணிவரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன வளாகத்தில் இடம்பெற்று வருகின்றது.

மேலதிக விபரங்களுக்கு 0772220103 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் கேட்டுள்ளார். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

தனது தனிப்பட்ட நற்பண்புகளைப்பற்றி அதிகம் பேசுபவர் பெரும்பாலும் மிகக்குறைந்த நற்பண்புடையவர்.


– ஜவஹர்லால் நேரு

## ஈழமும் பலஸ்தீனமும்…!

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோநிலையால், காஸா முனையில் ஏற்பட்டுள்ள போர்நிலை தொடர்பிலும் அங்கு தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனிதாபிமான நெருக்கடிகள் தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80ஆவது கூட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் கனதியான உரையொன்றை நிகழ்த்தியிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க. '30 ஆண்டுகாலப் போரின் வலியை உணர்ந்த நாடு என்ற ரீதியில், காஸாவில் இடம்பெறும் காட்சிகள் பதைபதைக்க வைக்கின்றன' என்றும் அவர் தன் கருத்தைப் பதிவுசெய்திருக்கின்றார். தனது உரையின் முத்தாய்ப்பான விடயங்களாக, காஸா தொடர்பான நீண்டதும் நெடியதுமான பதற்றங்களுக்குத் தீர்வாக, 'சுதந்திரப் பலஸ்தீனத்தை' ஏற்பதாகவும், '1967ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை வரையறுத்த கோட்பாட்டின்படி இரு நாட்டுக் கொள்கை பேணப்படவேண்டும்' என்றும் ஜனாதிபதி அநுர வலியுறுத்தியுள்ளார்.

பலஸ்தீனர்கள் மீதான (காஸா) இஸ்ரேலின் ஆக்கிரமிப்பானது பின்புலமின்றிய விடயமல்ல. அமெரிக்கா மற்றும் நேட்டோக் கூட்டணியிலுள்ள இராணுவ வல்லாதிக்கத்தைக் கொண்ட நாடுகளின் அனுசரணையில்தான் இஸ்ரேல் இந்தத் தீவிரமானதும் - கொடூரமானதும் - மிருகத்தனமானதுமான ஆக்கிரமிப்பைமுன்னெடுத்துவருகின்றது. இவ்வாறானதொரு நிலையில், பலஸ்தீனத்தின் பக்கமுள்ள நியாயப்பாட்டை ஏற்று, சுதந்திரப் பலஸ்தீனத்தை அங்கீகரித்து அறிவித்தமைக்காக ஜனாதிபதி அநுரவை எத்தனை பாராட்டினாலும் அது தகும். அதிலும், அமெரிக்காவுடனான வர்த்தகப் பதற்றங்கள், இஸ்ரேலின் வேலைவாய்ப்புகள் என்று இலங்கையின் பொருளாதாரம் எங்கெல்லாம் கட்டமைக்கப்பட்டிருக்கின்றதோ, அந்த நாடுகளின் தவறுகளைக் கண்டும் காணாமலும் இருக்காமல், நேர்படக் கண்டித்தமை உண்மையில் மிகப்பெரும் விடயம்தான். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பலஸ்தீனத்தின் நிலையை - இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோநிலையை இலங்கை அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கின்றது என்பதையே, ஜனாதிபதி அநுரவால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கருத்துகள் எந்தச் சந்தேகமுமின்றி மெய்ப்பிக்கின்றன. ஆனால், பலஸ்தீனத்துக்காக உருகும் இதே அநுரகுமாரஇலங்கையில் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு வலியுறுத்தல்களுக்கு வேணவாக்களுக்கு என்ன பதிலைக் கொடுத்தார்? இந்த விடயத்தில் என்ன நிலைப்பாட்டில் உள்ளார்? என்ற சுயபரிசீலனை அவர்களுக்கு இப்போது மிகப்பிரதானமானது. கடந்தகாலத் துயரங்களில் இருந்து குறைந் பட்சம் தற்போதைய அரசாங்கமாவது பாடத்தைக் கற்றிருந்தால், 'இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெறவேயில்லை' என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கமாட்டார்கள். ஆக, காஸாவில், இஸ்ரேல் பலஸ்தீனர்களுக்கு எதைச் செய்கின்றதோ அதைவிட மோசமாக தமிழர்களுக்கு வினையாற்றிக்கொண்டு எவ்வாறு இஸ்ரேலை இலங்கை விமர்சிக்கமுடியும்? இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினைக்குத்தீர்வாக, ஐக்கியநாடுகள் சபையாலும், சர்வதேசத்தாலும் 1967ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட இருநாட்டுக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கும்படி ஜனாதிபதி அநுர கூறியுள்ளார். ஆனால், இதே அரசாங்கத்தினர் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணையை மறுக்கின்றனர் எனில், இவர்களின் நிலைப்பாடுதான் என்ன? 'கண்ணாடிக் கூட்டுக்குள் இருந்துகொண்டு கல்லெறியக்கூடாது'. இஸ்ரேல் திரும்ப எறிந்துவிட்டால், இலங்கையின் முகத்திரை தாறுமாறாக உடைந்துவிடும். முதலில் தன்னைத் திருத்திக்கொண்டு, ஊருக்கு உபதேசம் செய்வதே சாலச் சிறந்தது.



## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, செப்.27

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அண்மையில் நடைமுறைகளைக் கையாண்ட முறைகளால் அவர் பதவிவகிக்க தகுதியற்றவர் என்று குற்றஞ்சாட்டி, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்போவதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நேற்று நாடாளுமன்றத்தில் பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா, முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை எந்த நியாயப்படுத்தலும் இல்லாமல் சபாநாயகர் நிராகரித்தார்.

இத்தகைய நடத்தை ஜனநாயகக் கொள்கைகளைக்கு குறைமதிப்புக்கு உட்படுத்துவதாகவும், நாடாளுமன்றப் பொறுப்புணர்வை சிதைப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## ஜப்பான் புறப்பட்டார் ஜனாதிபதி

கொழும்பு, செப்.27

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கான விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜப்பான் நோக்கிப் புறப்பட்டுள்ளார். ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி இன்று 27ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார். (ச-இ)

## நாமல் வழக்கு டிசெம்பருக்கு

கொழும்பு, செப்.27

சர்ச்சைக்குரிய 'கிரிஷ்' திட்டம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வுக்கு எதிராகச் சட்டமா அதிபரால் தாக்கல் செய்த வழக்கை டிசெம்பர் 18 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்க கொழும்பு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுவழக்குவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

அதேவேளை இலங்கையில் ரக்பியை ஊக்குவிப்பதற்காக இந்திய நிறுவனமான 'கிரிஷ்' நிறுவனத்திடமிருந்து ரூ. 70 மில்லியன் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச பணமோசடி செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கதலிக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், செப்.27

யாழில் கதலி வாழைப்பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. வாழைமரங்களில் பரவும் நோய்த்தாக்கம் காரணமாக அவை காய்க்கும் தன்மையை இழந்துள்ளன.

இதனால் சந்தையில் கதலி வாழைப்பழத்துக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 250 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (ச-25,17)



## மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, செப்.27

நாட்டில் கடற்கரைப் பகுதிகளில் பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு நீடித்துக் காணப்படும் என மீனவர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

குறிப்பாக காலி முதல் பொத்துவில் வரை மற்றும் புத்தளம் முதல் காங்கேசன்துறை (மன்னார் வழியாக) வரையிலான கடற்பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படும். இந்தக் கடல் பிராந்தியங்களில் மணிக்கு 55-65 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை

ஞாயிற்றுக்கிழமை - புரட்டாதி 12

28.09.2025

சுபநேரம் : 03.02 - 04.32

ராகுகாலம் : 09.02 - 10.32

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் திலீபனுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி...





படங்கள் ஐ. சிவசாந்தன்




தியாகதீபம் திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த இடத்தில் அஞ்சலி...



# வீதிக்குத் திலீபன் பெயர் சபை வளாகத்தில் சிலை

## வலி. கிழக்குப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், செப்.27

நிர்வாக நடைமுறைகளுக்கு அமைவாக வீதியொன் றுக்குத் திலீபன் வீதி என பெயரிடுவதற்கும் சபை வளா கத்தில் திருவுருவச்சிலை அமைப்பதற்கும் வலி. கிழக்குப் பிரதேசசபையில் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

தியாகதீபம் திலீபனின் நினைவுதினம் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் சபை முன்றலில் இடம்பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பிரதேசசபை அமர்வில், தியாக தீபத்தினை நினைவுகூர்ந்து முன்னைய காலங்களில் திலீபன் வீதி என பிரயோகத்தில் காணப்பட்டுப் பின்ன ரான சூழ்நிலையில் பொக்கணை வீதியாகக் காணப்ப டும் வீதிக்கு நிர்வாக நடைமுறைகளுக்கு அமைவாக திலீபன் வீதி என மீளவும் மாற்றியமைப்பதற்கும் தியாகதீபம் திலீபனுக்கு பிரதேசசபை வளாகத்தில் திருவுருவச் சிலையை 1975ஆம் ஆண்டின் 4 இலக்கக் காட்சிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் உள்ளூ ராட்சி அமைச்சரின் அனுமதியைப் பெற்று நிறுவுவதற்கும் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. (ச-இ)



# தியாகதீபத்துக்கு மன்னாரில் அஞ்சலி

மன்னார், செப்.27

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில், தியாகதீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு அஞ்சலி நிகழ்வு மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற் றது. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இ. சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் தியாகதீபம் திலீபனின் உருவப்படத்துக்கு சுடர் ஏற்றி மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-25,56)



புதுக்குடியிருப்பு உடையார்கட்டுப் பிரதேச மக்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினரின் ஒத்துழைப்புடன் தியாகதீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சமூக செயற்பாட்டாளர் தியாகு தலை மையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-25, 19)

# கொழும்பில் திலீபனுக்கு அஞ்சலி

கொழும்பு, செப்.27

தியாகதீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று தமிழர்தாயகப் பகுதிகளிலும், புலம் பெயர்தேசங்களிலும் உணர்வெழுச் சியுடன் நடைபெற்ற நிலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன் இலங் கைத் தலைநகர் கொழும்பில் தியா கதீபம் திலீபனுக்கு இறுதிநாள் அஞ் சலிகளைச் செலுத்தினார். இதன் போது தியாகதீபம் திலீபனின் திரு வுருவப் படத்துக்குச் சுடரேற்றப்பட்டு, மலர்தூவப்பட்டு அஞ்சலி செலுத்தப் பட்டது. (ச-246)





# பருத்தித்துறையில் திலீபனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப்.27

தியாகி திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவேந் தல் இறுதிநாள் நிகழ்வுகள் பருத்தித்துறையில் உள்ள அவரது நினைவாலயத்தில் நேற்று வெள் ளிக்கிழமை காலை 8 மணிக்கு வடமராட்சி மக்க ளால் அடையாள உண்ணாவிரதத்துடன் நினை வேந்தப்பட்டது. மாவீரரான புரட்சித்தமிழின் பெற் றோரான பரஞ்ஜோதி தவமணியால் பொது ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து தியாகி திலீபன் திரு வுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-25,27,100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

5ஆம் வட்டாரம் மணற்கும்பானைச் சேர்ந்த **அருளம்பலம் யோகம்மா** ஆகிய நான் எனது பெயரை **அருளம்பலம் யோகேஸ்வரி** என மாற்றம் செய்கின்றேன்.

**அருளம்பலம் யோகேஸ்வரி**

(CS 59494) A

## நல்லூர் பிரதேச மூத்தோர் பேரவை

### அதிஸ்டலாபச் சீட்டு குலுக்கல் விபரம்

மேற்படி அமைப்பினால் 20.09.2025 ம் திகதி குலுக்கப்பட்ட அதிஸ்டலாப சீட்டின் வெற்றி பெற்றவர்கள் விபரம் பின்வருமாறு:

1ம் பரிசு - 428
2ம் பரிசு - 1101
3ம் பரிசு - 283


ஆறுதல் பரிசுகள் :-
1001, 1048, 1886, 586, 462, 1336, 1602, 203, 620, 51

செயலாளர்

(CS/30300) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## உயிரில் கலந்த அப்பாவுக்கு பதினாறாவது ஆண்டு நினைவுகள்



எங்களுக்காக
15.04.1949

இறைவனுக்காக
24.09.2009

திதி:
பூர்வபக்க ஷஷ்டி
27.09.2025

அமரர்
**கந்தசாமி தங்கராசா (பத்தர்)**

நன்மையிலும் தீமையிலும் நீங்கள்
எங்களுடன் சேர்ந்து இருப்பீர்கள் என்று
நினைத்து இருந்தோம் அப்பா
பாதியிலே எங்களை விட்டு
ஏன் போனீர்கள் அப்பா
ஆயிரம் இடத்தில் தேடி விட்டோம்
எங்கு தான் இருக்கின்றீர்கள் அப்பா!
ஏக்கத்தோடு காத்திருக்கும்

601, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 5762

(CS 59501) A

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
23 . 03 . 1942

மறைவு
25 . 09 . 2025

எமது வேரற்கேணி கந்தசுவாமி ஆலய பரிபாலன சபையின் பொருளாளராகிய **திரு.கந்தையா ஸ்ரீகணேசன்** அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் கந்தையா சிவமலர்**

அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு துயருறுவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேரற்கேணி கந்தசுவாமியாரை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தென்மட்டுவில்
வேரற்கேணி கந்தசுவாமி ஆலய
பரிபாலன சபையினர்.

(CS 59495)A


ஒக்ரோபரில்

# பிரதமர் ஹரிணி சீனா பயணம்!



கொழும்பு, செப். 27

பிரதமர் ஹரணி அமரசூரிய எதிர்வரும் மாதம் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு சீனாவுக்குச் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டு 76 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் நேற்று நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தார். இதன்போதே, பிரதமர் ஹரிணி ஒக்ரோபர் மாதம் சீனாவுக்குச் செல்லவுள்ளார் என்று அவர் தெரிவித்தார். (ம)

# ஈழத்தமிழர் கொலையுண்டபோது மௌனம் காத்தவர் விஜய்!

## திடீர் அக்கறை போலியானது திருமாவளவன் கடும் காட்டம்

சென்னை, செப். 27

ஈழத் தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட போது மௌனமாக இருந்த விஜய், தற்போது அவர்கள் தொடர்பில் முன்வைக்கும் கருத்துகள் சந்தர்ப்பவாத நாடகமே - இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் விமர்சித்துள்ளார்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அண்மைக்காலமாக தீவிர தேர்தல் பரப்புரைகளில் விஜய் ஈடுபட்டுவருகின்றார்.

இதன்போது, 'ஈழத் தமிழர்களின் நலன்களுக்காகத் தனது கட்சி முன்னிற்கும்' என்று அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில்கூறியுள்ளார்.

இதையடுத்தே, 'ஈழத் தமிழர்கள் தொடர்பில் விஜய் காண்பிக்கும் அக்கறை போலியானது' என திருமாவளவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் உச்சத்தில் இருந்த போது, அந்த விடயங்கள் தொடர்பில் விஜய் ஏதுவும் பேசவில்லை. ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டபோதும் விஜய் மௌனமாகவே இருந்தார். இன்று திடீரென வந்துநின்று ஈழத் தமிழர்களுக்காக முன்நிற்பேன் என்கின்றார். இது உச்சக்கட்ட சந்தர்ப்பவாதம்.

அரசியலில் ஈடுபடுவதற்கு அனைவருக்கும் உரிமையுள்ளது. அதை நாங்கள் மதிக்கின்றோம். ஆனால், சந்தர்ப்பவாத அரசியலும், குரோத அரசியலும் மக்களிடம் இனியும் எடுபடாது. அதிலும் ஈழத் தமிழர்களை வைத்து அரசியலில் ஈடுபட வேண்டாம் என்று அனைவரிடமும் கோருகின்றேன் - என்றார். (ம)


## விதை நெல் விற்பனைக்கு

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.

**077 659 2044**

(CR/45066) J-1

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலியில் 01, 02, 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.
பலாலி வீதி - 75 மீற்றர்,
திருநெல்வேலி சந்தி - 300 மீற்றர்

தொடர்புகளுக்கு:
**077 253 2575**

(CS/40933) J-1


# திலீபனின் நினைவேந்தலை குழப்புவதற்கு முயன்றவரால் பரபரப்பு!

## கடும் எச்சரிக்கையுடன் அனுப்பப்பட்டார்

நல்லூரில் தியாகதீபம் திலீபனின் பிரதான நினைவுநாள் நிகழ்வுகளின்போது, அநாமதேயத் துண்டுப் பிரசுரங்களை வீசி நிகழ்வைக் குழப்ப முற்பட்டவரால் பரபரப்பு ஏற்பட்டது. அந்த நபர், நினைவேந்தலில் ஈடுபட்டவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு எச்சரித்து அனுப்பப்பட்டார்.

தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவுநாளின் பிரதான நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் நடைபெற்றது. இதன்போது முற்பகல் 11.30 மணியளவில் நபரொருவர் திடீரென நினைவுத் தூபிக்கு அருகில் நுழைந்து, 'அரசியல் கட்சிக்கான வேண்டுகோள்' எனும் தலைப்பிடப்பட்ட அநாமதேயத் துண்டுப் பிரசுரங்களை வீசிவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இதையடுத்து, நினைவேந்தலில் ஈடுபட்டவர்கள் அந்த நபரை விரட்டிச் சென்று மடக்கிப் பிடித்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, '2 ஆயிரம் ரூபா பணம் வழங்கிய சிலர், இந்தத் துண்டுப் பிரசுரங்களை திலீபனின் நினைவேந்தல் இடத்தில் விநியோகிக்குமாறு கூறினார்கள்' என்று தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, நினைவேந்தல் குழுவால் அவர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அனுப்பப்பட்டார். (ம-66)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முன்னாள் உப அதிபர்
**திருமதி. மைதிலி தேவராஜா**
அவர்களின் அன்புக் கணவர்

**பேரம்பலம் தேவராஜா**


கடந்த 2025.09.24 புதன்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 04.01.1958
மறைவு 24.09.2025

பாடசாலைச் சமூகம்,
யா/ புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலயம்

(CS/59496) J-1

## 13ம் ஆண்டு நினைவலைகள்



**வினாசித்தம்பி காசிலிங்கம்**
(முன்னாள் பங்காளர் - No - 1 மதுபானச்சாலை)
திதி : பூர்வசஷ்டி (27.09.2025)

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நிறுத்த முடியவில்லை எங்களில் கலந்த
உங்களை – எல்லையற்ற நினைவுகள் நிற்கின்றன நிழலாக !
ஆண்டுகள் பதின்மூன்று கடந்தாலும் தங்கள்
நிபந்தனையற்ற அன்பும், தன்னலமற்ற தியாகங்களும்
மறையவில்லை !
பூமியிலே இருந்து மகிழ்ந்த காலமெல்லாம் மறைந்திடுமோ அப்பா!

84/A பொற்பதி வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்

(CS/59502) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன விலங்குக் கணக்கெடுப்புக்கு 39 லட்சம் ரூபா மட்டுமே செலவு!

கொழும்பு, செப். 27

நாடளாவிய ரீதியில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட வன விலங்குக் கணக்கெடுப்புக்காக 39 இலட்சத்து 16 ஆயிரத்து 314 ரூபா மாத்திரமே செலவிடப்பட்டது என்று விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.



வன விலங்குகுள் கணக்கெடுப்புக்காக பல கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும், இதுவொரு வீண்விரய நடவடிக்கை என்றும் எதிர்க்கட்சிகள் அண்மைக்காலமாகக் குற்றஞ்சாட்டி வந்தன.

இந்த நிலையிலேயே, வன விலங்குக் கணக்கெடுப்புக்காகச் செலவிடப்பட்ட நிதி தொடர்பான விவரம் விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்னவால் வெளியிடப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

நெடுந்தீவைத் தவிர்த்து ஏனைய அனைத்து கிராம அலுவலர் பகுதிகளிலும் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கணக்கெடுப்புக்கு அமைய இலங்கையில் 51 இலட்சத்து 97 ஆயிரத்து 517 மந்திகள், 17 இலட்சத்து 47 ஆயிரத்து 623 குரங்குகள், 26 இலட்சத்து 66 ஆயிரத்து 630 மர அணில்கள், 42 இலட்சத்து 85 ஆயிரத்து 745 மயில்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில் விலங்கு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. இதனால் காட்டு விலங்குகளால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் விளைவை மதிப்பிடுவதிலும் விலங்குகளைக் கட்டுப்படுத்துவதிலும் சிக்கல் காணப்பட்டது. காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தான் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. எனினும், பொதுமக்களால் வழங்கப்பட்ட தரவுகளில் 50 வீதமானவையே உறுதியானவை. தரவுகளின் அடிப்படையில் வன விலங்குகளைக் கட்டுப்படுத்துவதற்காக தொழில்நுட்ப ரீதியில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-இ)



## வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த

# மர்மநபர்களால் நாய் வெடிக்கொலை

## நெல்லியடி பொலிஸ் விசாரணை

யாழ்பாணம், செப். 27

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மத்தொணி பகுதியில், வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த சந்தேகநபர்கள் அந்த வீட்டின் நாயை வெட்டிக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தனது தந்தையை இழந்து, தனிமையில் வசித்துவரும் பெண்ணின் வீட்டிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-23)

# திலீபன் நினைவேந்தல் சுப்பர்மடத்தில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், செப்.27

பருத்தித்துறை சுப்பர்மடத்தில் தியாகதீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் பந்தல் அமைக்கப்பட்டு கடந்த 12 நாள்களாக அஞ்சலி செலுத்தப்பட்டு வந்த நிலையில் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றது. (ச-100)

# மேடைக்கூரைகள் இன்றி சாவகச்சேரி ரயில் நிலையம்

## பயணிகள் பாதிப்பு


யாழ்ப்பாணம், செப்.27

சாவகச்சேரி புகையிரத நிலையத்தின் பயணிகள் தங்கிநிற்கும் புகையிரத மேடையின் மேற்பகுதிக் கூரை சிதைவடைந்து சில பகுதிகளில் கூரைச்சீற்றுகள் இன்றிக் காணப்படுகின்றன. இதனால் மழை, வெயில் நேரங்களில் பயணிகள் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் நிலைய மேடையின் கூரைத் தகரங்கள் துருப்பிடித்து அதில் துவாரங்கள் ஏற்பட்டுள்ளன. புகையிரத அதிபரின் அறைக்கு அருகிலுள்ள இரு பக்கங்களிலும் கூரைச்சீற்றுகள் இன்றி வெளியாகக் காணப்படுகிறது.

இதேவேளை மேடையின் மின்னிணைப்பு வயர்கள் கழன்று தொங்கியவாறு காணப்படுகின்றன. எனவே இவற்றைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 131)


# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 05 . 1988

மறைவு 26 . 09 . 2025

## தருமராசா ஞானகிரி

(யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை)

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், அல்லாரை வடக்கு மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட தருமராசா ஞானகிரி அவர்கள் நேற்று (26.09.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் தருமராசா - காலஞ்சென்ற பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சடாட்சரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானகிரி தனுசா (முன்னாள் ஆசிரியை வீரசிங்கம் மத்திய கல்லூரி கிளி, பரந்தன் அ.த.க பாடசாலை) இன் அன்புக் கணவரும், ஆருத், ஆதர்ஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானதீபன் (புகையிரத திணைக்கள உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு சகோதரனும், பிரியதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கோப்பாய்), கோகிலதாஸ் (அமெரிக்கா), இமையா (அமெரிக்கா), டினோஜன் (கணக்காளர் K.K.S பொலிஸ் தலைமைக்காரியாலயம்), அனுசா, சசிபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 648 0498, 077 466 9642



# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 11 . 1944

மறைவு 25 . 09 . 2025

## சின்னத்துரை நடராசா

(C.T.B ஓய்வு நிலை உத்தியோகத்தர்)

சங்கானையை பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு பயித்தோலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நடராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (25.09.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், வேல்முகுந்தன் (கனடா), சிவமேகலை (கனடா), கஜேந்திரன் (ஆசிரிய ஆலோசகர் வலிகாமம்), பிரதாபன் (கனடா), நமணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வி, விஜயதாஸ், சோபிகா, கஜேந்தினி, டக்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அஞ்சலின், ஆகாஸ், வாரணன், ஆதித்தன், திவ்வியா, ஆதிரையன், லக்சயன், லஸ்வின், லவின், இஷான், அகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள இல்லத்தில் நாளை (27.09.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பயித்தோலை, அச்சுவேலி
தெற்கு அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கூட்டத்தொடரும் வாணி விழா நிகழ்வும்

யாழ்ப்பாணம், செப்.27

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் ஏற்பாட்டில், தெய்வீகத் திருக் கூட்டத் தொடருடன் இணைந்த வாணி விழா நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற வுள்ளன. (ச-25)



# கிளிநொச்சியில் நிதியறிவுக் கண்காட்சி

கிளிநொச்சி, செப்.27

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிவு மாதத்தை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நிதியறிவுக்கண் காட்சி நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. மத்திய வங்கியின் கிளிநொச்சிப் பிராந்திய முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், மாவட்டச் செயலர் எஸ்.முர ளிதரன், மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்திக்கான பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கண்காட் சியை ஆரம்பித்துவைத்தனர்.

இந்தக் கண்காட்சியில் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர் காட்சிக் கூடங்கள், கொழும்பு பங்குப்பரி வர்த்தனை முதலீட்டு வழிகாட்டுதல் கள், ஊழியர் சேமலாபநிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய சேவைகள், கொடுகடன் தகவல் பணியக சேவைகள் மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டுதல்கள் என்பன இடம்பெற்றன. (ச-113)

# போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,செப்.27

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை யின் தொழிற்பயிற்சி நிலையங்களில், 5 கற்கை நெறிகளுக்கான போதனாசிரியர் கள்(நாளாந்த அடிப்படை) வெற்றிடங்க ளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலா ளர், கணினி வடிவமைப்பாளர், அலுமினி யம் பொருத்துநர், முதியோர் பராமரிப்பாளர், பொது பராமரிப்பாளர் ஆகிய வெற்றிடங்க ளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ்,கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல், மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவ னத்தில் NVQ4 உடன் NVQ5 அல்லது அதற்கு மேல் தொழிற் தகமைச் சான்றிதழு டன் ஒரு வருடம் கற்பித்தல் அனுபவம், சம் பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்துக்கு மேலான தொழிற்றுறை அனுபவம் உடைய வர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் தக மையுடையவர்கள் தங்கது சுயவிவரக் கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி, அனுபவச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதி களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்ப யிற்சி அதிகாரசபை, 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ். வீதி யாழ்ப் பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக் கலாம். அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம் என்று பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள் ளார். (க-இ)

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை


எம்மிடம் சகல தரப்பினர்களுக்கும் எல்லா இனத்தவர் களுக்கும் உள்நாடு வெளிநாடு அரச உத்தியோகம் உத்தியோகம் அல்லாதது முக்கியமாக இலங்கையிலி ருந்து வெளிநாடு சென்று அங்கு திருமணம் செய்யும் ஆண்கள் எல்லோருக்கும் வெளிநாட்டு மணமகள்கள் உண்டு. மற்றும் உள்ளூர் மணமகள் (P) சமுகம் தேவை. உடன் திருமணம் நிறைவேற்றி தரப்படும்.

**தொடர்பு: வீ.ஜெயந்தி**

**077 9733 183**

(CS 4094) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 12 . 1938

மறைவு 24 . 09 . 2025

### வைரமுத்து சுப்பிரமணியம் (Rest house maniam)

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, கல்வியங்காடு, கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சுப்பிரமணியம் (Rest house maniam) அவர்கள் கடந்த 24.09.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வைரமுத்து - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், குமாரசாமி இராஜலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நவநீதம்மா அவர்களின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன், மனோச்சந்திரன், சுரேஷ்சந்திரன் (சூட்டி), குணபாலச்சந்திரன் (சந்தி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேவதி, ஷோபனா, அனுஷா, உஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்க ளான புவேனஸ்வரி, நாகேஸ்வரி, மஹேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான காரத்திகேசு, கதிரவேலு, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிரோசன், இளங்கோ, அபிராமி, ஆதவன், ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு:
Sunday, 28 Sep 2025 5:00 PM-9:00 PM, Monday, 29 Sep 2025 8:00AM-9:30AM Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

இறுதிக்கிரியை : Monday, 29 Sep 2025 9:30 AM Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம் Monday, 29 Sep 2025 11:00 AM North Toronto Crematorium 2 Stalwart industrial Dr, Gormley, ON LOH IGO, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
ரவி - மகன் Mobile: +16472960164
மனோ - மகன் Mobile: +16474037684
சூட்டி - மகன் Mobile: +14167250411
குணா(சந்தி) - மகன் Mobile: +14167970684

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 46324) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 11 . 1932

மறைவு 25 . 09 . 2025

### சிதம்பரநாதன் திசைவீரசிங்கம்

(சிவனடியான் மாஸ்ரர்)

முன்னைநாள் கணித ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சீரணி நாகபூசணி அம்மன் ஆலயநிர்வாக சபையின் முது பெரும் உறுப்பினரும், அகில இலங்கை சமாதான நீதவானும் ஆகிய சிதம்பரநாதன் திசைவீரசிங்கம் அவர்கள் கடந்த (25.09.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - கனகம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், சுதுமலையை வசிப்பிடமாகவும் காலஞ்சென்றவர்களான K.S சுப்பிரமணியம் (KSS) - பூமணி தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாஜினி, காலஞ்சென்ற சியாமினி மற்றும் பிரேமினி, லோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (ரவி), சித்திவினாயககுமரன் (குமார்), சசிதரன் (சசி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நாகேஸ்வரி, தெய்வநாயகி ஆகியோரின் சகோதரரும், குணபாக்கியம், மனோரஞ்சிதம், சந்திரோதயம் மற்றும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், நரேந்திரன், சிறீதரன், சிவக்கொழுந்து, சிந்தாமணி, இராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், பவித்திரா, ரம்யா, அபினா, அர்ச்சனா, மிதிலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

சைவசமய இறுதிக்கிரியைகள் அன்னாரின் சுதுமலை மனை முற்றத்தில் நாளை (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆரம்பித்து தகனக்கிரியைகள் தாவடி இந்து மயானத்தில் பிற்பகல் 01.30 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை, மானிப்பாய்

தகவல்: குடும்பத்தினர்

கலாஜினி - +61 414 864 818
பிரேமினி - +44 798 399 9400
லோஜினி - +44 784 602 4558
மதுசூதனன் - +94 077 614 1099

(CS/4090) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை வீழ்த்த அரசாங்கம் இடமளிக்காது



## அமைச்சரவைப் பேச்சாளர் திட்டவட்டம்

**கொழும்பு, செப்.27**

**தடையற்ற மின்விநியோகத்தை உறுதிப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதனாலேயே மின்சார சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை வீழ்த்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உத்தேச மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படாவிட்டால் மின்சக்தித்துறையின் வீழ்ச்சியைத் தடுக்கமுடியாது. அதனால் மறுசீரமைப்பை மேற்கொள்ளவேண்டியது அத்தியாவசியமாகும்.

மின்சாரசபை ஊழியர்களை 50 சதவீதத்தால் குறைத்து அதை முழுமையாகத் தனியார் மயப்படுத்துவதே கடந்த அரசாங்கத்தின் நோக்கமாகவிருந்தது. ஆனால் நாம் அதை நான்கு பிரதான அரச நிறுவனங்களாக்கி நவீனமயப்படுத்தவே நடவடிக்கை எடுத்துள்ளோம். சட்டரீதியாகவே இந்த நிறுவனங்கள் நிறுவப்படவுள்ளன. எந்தவொரு ஊழியரையும் சேவையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கவில்லை. ஆனால் இவற்றுடன் இணைந்து செயற்படமுடியாது என எண்ணுபவர்கள் நாம் ஏற்கனவே அறிவித்துள்ளமைக்கமைய நட்டஈட்டைப் பெற்று சுயவிருப்பின் பேரில் சேவையிலிருந்து விலகமுடியும்.

பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியடைச் செய்வதற்கு இடமளிக்கப்போவதில்லை. அவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும். மக்கள்மீது சுமைகளை சுமத்தி இவற்றை நிர்வகித்துச் செல்ல அரசாங்கம் விரும்பவில்லை. மின்சாரசபை சட்ட ரீதியாகவே நிறுவனமயப்படுத்தப்படுகிறது. இவை 100 சதவீதம் அரச நிறுவனங்களாகும். அதனால் யாரும் அச்சமடையத் தேவையில்லை - என்றார். (எ-இ)

# ரணில், சஜித், நாமலுக்கு சிந்திக்கும் ஆற்றலில்லை

## அரசியலில் ஒதுங்கவேண்டும் என்கிறார் பொன்சேகா



கொழும்பு, செப்.27

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ மற்றும் நாமல் ராஜபக்ச ஆகிய மூவரும் அரசியலில் இருந்து முழுமையாக ஒதுக்கப்படவேண்டும். இந்த நாட்டை அபிவிருத்தி செய்யும் அளவுக்குச் சிந்திக்கும் ஆற்றல் இவர்களுக்கு இல்லை, உணர்வுமில்லை என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் பழைய அரசியல் முறைமைதான். கசிப்பு விற்கிற வியாபாரிகளைப் பிடித்துக்கொண்டு அவர்களின் பணத்தை வைத்துக்கொண்டு மக்களுக்கு சாராயப் போத்தல்களைக் கொடுத்துக்கொண்டு அரசியல் செய்யத்தான் இவர்களுக்குத் தெரியும்.

நான் ஐக்கிய மக்கள் சக்தியின் களனி தொகுதி அமைப்பாளராக 6 வருடங்கள் இருந்தேன். அந்தக் காலப்பகுதியில் மக்களுக்கு ஒரு சாராய கிளாஸ் கூட கொடுத்ததுமில்லை; மக்கள் என்னிடம் அதைக் கேட்டதுமில்லை; சாராயம் குடிக்கும் இடத்தில் நான் இருந்ததுமில்லை.

நான் விலகியதும், எனது இடத்துக்கு நியமிக்கப்பட்டவர் வந்த உடனேயே சாராய பவுஸரை வீட்டுக்கே கொண்டு வந்து மக்களுக்கு விநியோகிக்கத் தொடங்கினார். இருந்தும் மக்கள் அவர்களை நிராகரித்துவிட்டார்கள். சஜித் இப்படியானவர்களுடன் இருக்கத்தான் விரும்புகிறார். இவ்வாறு நிறையப்பேர் சஜித்துடன் உள்ளார்கள். ஏனைய கட்சிகளிலும் உள்ளார்கள்.

இவர்களின் வேலைத்திட்டம் நாட்டுக்கானது அல்ல. இவர்களின் சொந்தத் தேவைக்கானது. பணம் சம்பாதிப்பது, சொத்துகள் சேர்ப்பது போன்றவைதான் இவர்களின் தேவை. இவர்களின் சொந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மக்கள் வாக்குப்போடவேண்டுமா? இதனால்தான் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ மற்றும் நாமல் ராஜபக்ச ஆகிய மூவரும் அரசியலில் இருந்து முழுமையாக ஒதுக்கப்படவேண்டும் என்று கூறுகின்றேன்- என்றார். (எ-75)

## பரிசில் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 27

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலத்தில் பரிசில் நாள் நிகழ்வு அதிபர் அ.கஜேந்திரன் தலைமமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)



நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கண்டாவளைப் புளியம்பொக்கணை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு நேற்றுமுன்தினம் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் கண்டாவளைப் பிரதேச செயலர் த.பிருந்தாகரன் கலந்துகொண்டார். (க-113)



மாத்தறையில் அண்மையில் நடைபெற்ற தேசியமட்ட தனிநபருக்கான தற்காப்புக்கலைப் போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி மாணவன் வி.பவிகரன் 18 வயதின் கீழ்ப்பிரிவில் முதல்முறையாக வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார். (ச)



# திடக்கழிவு மேலாண்மைக்காக ஐரோப்பிய ஒன்றியம் மானியம்

கொழும்பு, செப்.27

மேம்பட்ட பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட ஒரு புதிய முயற்சியை ஆரம்பிப்பதற்காக அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் மானிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் 8 மில்லியன் யூரோ மானியத்தின் மூலம், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சு, சுற்றுச்சூழல் அமைச்சு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றால் கூட்டாக உருவாக்கப்பட்ட ஒரு திட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக சீரற்ற நிலையில் காணப்படும் சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதன் மூலமும், இலக்குவைக்கப்பட்ட பாதுகாப்பு உத்திகளைச் செயற்படுத்துவதன் மூலமும், நிலையான நில பயன்பாட்டு நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலமும் பல்லுயிர்ப் பாதுகாப்பை உருவாக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மானிய ஒப்பந்தத்தில் அரசாங்கத்தின் சார்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெருமவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோவும் கையொப்பமிட்டுள்ளனர். (எ-இ)

# தேர்தலில் கட்சிகள் போட்டியிடாதவாறு வியூகம் வகுத்துச்செயற்படுகிறது அரசு

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.27

2028ஆம் ஆண்டு இடம்பெறப் போகும் தேர்தலில் எந்தக் கட்சியும் போட்டியிட முடியாதவாறு வியூகத்தை வகுத்துக்கொண்டு தற்போதைய அரசாங்கம் செயற்படுகிறது என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2035ஆம் ஆண்டுவரை அதிகாரத்தில் இருப்பதுதான் இந்த அரசாங்கத்தின் திட்டம். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையைத் தக்கவைத்துக்கொண்டும் அதைச் செய்யலாம் அல்லது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கி நாடாளுமன்ற முறைமை ஊடாகவும் செய்யலாம்.

ஜே.ஆர்.தான் இவர்களுக்கு முன்னுதாரணம். அவர் அதிகாரத்தைத் தக்க வைத்ததுபோலவே இவர்களும் தக்க வைக்கப் பார்க்கிறார்கள். அனைத்துத் துறையையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டே ஜே.ஆர். ஆட்சியை நீடித்தார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அதைச் செய்து கொண்டு போகிறார். ஆனால் இது சாத்தியமில்லை - என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருங்குளவி...

ளார். புலோலி தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அன்னபூரணம் (வயது-83) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் காலை, பனையால் விழுந்த கூட்டிலிருந்து கலைந்த ஏராளமான கருங்குளவிகள் அவரைக் கொட்டிய நிலையில், உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு பின்னர் சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே நேற்று மாலை உயிரிழந்தார்.

கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை பருத்தித்துறைப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-ம-100)

## திலீபனின்...

பிரதான நினைவேந்தல் நிகழ்வு, நல்லூரில் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஒழுங்கமைப்பில் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணியளவில் ஊரெழுவில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் பிறந்த இல்லத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தியாகதீபம் திலீபன் நினைவு சுமந்த நடைபவனியுடன் ஊர்திகளின் பேரணியும் ஆரம்பமானது. நடைபவனியுடன் இணைந்த ஊர்திகளின் பேரணி நல்லூர் கிட்டுப் பூங்காவைக் காலை 9.45 மணியளவில் அடைந்தது. பின்னர் அங்கிருந்து முற்பகல் 10 மணியளவில் தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபி வரை பேரணி முன்னெடுக்கப்பட்டு முற்பகல் 10.20 மணியளவில் நிறைவடைந்தது.

அதனைத் தொடர்ந்து திலீபனின் உயிர் பிரிந்த நேரமான 10.48 மணியளவில் திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வடக்கு வீதியில் முன்னாள் போராளி செல்வரட்ணம் ராகவன் சுடரேற்றினார். சமநேரத்தில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் மாவீரர்களான வீரவேங்கை கீதா, கீதாஞ்சலி ஆகியோரின் தாயார் திருச்செல்வம் ஆசைப்பிள்ளை பொதுச் சுடர் ஏற்றி அஞ்சலித்தார். இரண்டு நிமிட அக வணக்கத்தைத் தொடர்ந்து திலீபனின் திருவுருவப்படத்துக்கு இரண்டு மாவீரர்களின் தாயாரும், நாட்டுப் பற்றாளர் அரசனின் துணைவியாருமான காந்திமதி மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தியாகதீபம் திலீபனின் நினைவுநாளை முன்னிட்டுத் தென்மராட்சி கைதடிப் பகுதியைச் சேர்ந்த 40 வயதான நபரொருவர் கைதடியிலிருந்து திலீபனின் நினைவுத் தூபியடியை நோக்கிப் பறவைக் காவடி எடுத்து வந்து தமிழ்மக்களின் விடுதலைக்காகக் கொண்ட கொள்கையில் இறுதிவரை உறுதியாகவிருந்து தம் இன்னுயிரை ஆகுதியாக்கிய திலீபனைக் கடவுளாகத் தம் உள்ளங்களில் வரித்து உயர்ந்த மரியாதையைச் செலுத்தினார்.

முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த்தேசிய அரசியல் பிரமுகர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலநூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். (அ-ம-26-20-66)

## காங்கேசன்...

காங்கேசன்துறை துறைமுகத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு, இந்திய அரசாங்கத்தின் நிதி ஒத்துழைப்பைப் பெறுவதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் சில நடைமுறைகள் இடம்பெற்ற போதிலும், இன்னமும் இறுதித் தீர்மானங்கள் எட்டப்படவில்லை.

துறைமுகத்துக்கான எதிர்கால கேள்வி மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு ஆகியவற்றைக் கவனத்திற்கொள்ளும்போது காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றியமைப்பது பொருளாதாரத்துக்கு வினைத்திறனானதாக அமையாது. இருப்பினும் அடிப்படை மட்டத்திலான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

காங்கேசன்துறை துறைமுகத்தை அண்மித்த கடற்பகுதி 10 தொடக்கம் 12 மீற்றர் வரையான ஆழத்தைக் கொண்டுள்ளது. இதை சர்வதேச துறைமுகமாக மாற்றவேண்டுமாயின் ஆழத்தை மேலும் அதிகரிக்கவேண்டும். இதற்கு அதிகளவான நிதியைச் செலவிட வேண்டியிருக்கும். எனவே, நிதிச் செலவு உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொள்ளும்போது அங்கு பெரியளவான அபிவிருத்திகளை மேற்கொள்வது பொருத்தமாக இருக்காது - என்றார். (அ-ம-இ)

## திடீர்..

உயிரிழந்துள்ளது. சஜித்தீபன் திசாரா என்ற சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

அண்மையில் அந்தச் சிசுவுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதன்பின்னர், உடற்சோர்வு ஏற்பட்ட நிலையில், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை வழங்கி, பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே அந்தச் சிசு உயிரிழந்துள்ளது.

சடலத்தில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## வர்த்தக...

பெருமளவு பொருள்கள் திருடப்பட்ட நிலையில், நான்கு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வர்த்தக நிலையத்தில் இருந்து 27 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பில் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியிருந்தார். இந்த முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார், நேற்று நான்கு சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 19, 27, 30 மற்றும் 32 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். திருடப்பட்ட பொருள்கள் பல மீட்கப்பட்ட நிலையில், சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-27)

## சத்திர...

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த நி.தர்சிகா (வயது-29) என்ற இளம் தாயாரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வயிற்றுக்குத்துக் காரணமாக கடந்த மே மாதம் அவர் சிகிச்சை பெற்றதுடன், மலம் வெளியேறுவதற்காக சத்திர சிகிச்சை செய்து குழாய் வைக்கப்பட்டது. அந்தக் குழாயை அகற்றுவதற்காக நேற்று மீண்டும் சத்திரசிகிச்சை இடம்பெற்றதைத் தொடர்ந்தே அவர் திடீர் சுகவீனம் ஏற்பட்டு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## கடற்றொழிலுக்குச்...

சிவரெத்தினம் சந்தோஸ் (வயது-17) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில், தனது சித்தப்பாவுக்குத் துணையாக களங்கட்டித் தொழிலுக்காகச் சென்ற போது, கடலுக்குள் இறங்கி சில நிமிடங்களில் களங்கட்டித் தடியைப் பிடித்தவாறு அந்தச் சிறுவன் மயக்கமடைந்துள்ளான். இதையடுத்து அவன் உடனடியான மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளான்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## உயிரிழந்த...

ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதி பகுதியைச் சேர்ந்த நி.சாருமதி என்ற தாயாரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 21ஆம் திகதி அவர் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்திருந்தார். இதன்போது, ஒரு குழந்தை இறந்து பிறந்ததுடன், மற்றொரு குழந்தை பிறந்த சில நிமிடங்களில் உயிரிழந்தது.

அன்றுமுதல் அந்தத் தாயார் மயக்கமடைந்த நிலையில் அவருக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், மயக்க நிலையில் இருந்து மீளாமல் நேற்று அவர் உயிரிழந்தார்.

சடலத்தில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## தமிழர்களின்...

'கிவுல் ஓயா' என்னும் பெயரில் நீர்ப்பாசனத் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மகாவலி அதிகாரசபையால் மாயா அல்லது பெரிய ஆறு மற்றும் சூரியன் ஆறு ஆகிய ஆறுகளை மறித்து பெரும் அணைக்கட்டு அமைக்கப்பட்டு கிவுல் ஓயாத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், 6 ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகள் வெலி ஓயாவில் அத்துமீறி குடியேறியுள்ள பெரும்பான்மை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

இவ்வாறாக கிவுல் ஓயா திட்டத்தினைச் செயற்படுத்தினால் வவுனியா வடக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக விவசாயக் குளங்கள் மற்றும் அவற்றின் கீழான வயல் நிலங்கள், தமிழர்களின் பூர்வீக கிராமங்கள் பலவும் நீரில்மூழ்கும் அபாயம் ஏற்படும்.

அந்தவகையில் இராமன்குளம், கொட்டோடைக்குளம், ஒயாமடுக்குளம், வெள்ளான்குளம், பெரியகட்டுக்குளம், பனிக்கல்மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக்குளம், திரிவைச்சகுளம் முதலான சிறிய நீர்ப்பாசனக் குளங்களும், வெடிவைச்சகல்லு குளத்தின் கீழ்வரும் வயல்காணிகள் பகுதியளவிலும், நாவலர்பாம், கல்லாற்றுக்குளம், ஈச்சன்குளம், கூழாங்குளம் வயற்காணிகளும் வவுனியா வடக்கிலுள்ள பழந்தமிழ் கிராமங்களான காட்டுப்பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டை கிராமம், மருதோடைக் கிராமத்தின் ஒருபகுதி உள்ளிட்ட பகுதிகள் குறித்த நீர்ப்பாசன அணைக்கட்டின் நீரேந்து பகுதிகளாக மாறும் அபாயம் ஏற்படும்.

தமிழர்களின் இதயபூமி எனப்படுகின்ற பூர்வீக மணலாற்றுப் பிரதேசத்தை வெலிஓயாவாக மாற்றிவிட்டு அங்கு அத்துமீறிக் குடியேற்றப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தவர்களே இந்த கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தால் பயன்பெறவுள்ளனர். அத்தோடு தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கிவுல் ஓயாத் திட்டத்தை செயற்படுவதில் அதிக அக்கறையோடு செயற்படுவதாகவும் அறியமுடிகின்றது. எனவே, இவ்வாறான திட்டங்களைக் கைவிட்டு மக்கள் மிகவும் அமைதியான முறையில் வாழ்வதற்கு வழியேற்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும் - என்றார். (அ-ம)

## நினைவேந்தலுக்குச்...

சபையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது, தியாகதீபம் திலீபனின் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்வதற்கு ஏதுவாக, சபை அமர்வை மதியம்வரை ஒத்திவைக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

உறுப்பினர்களின் கோரிக்கையை, சபையில் உள்ள ஏனைய உறுப்பினர்களிடம் தவிசாளர் தெரிவித்தபோது, சில உறுப்பினர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இதையடுத்தே, சபையை ஒத்திவைக்குமாறு கோரிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்து திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்நாய்களுக்கு இலவசக் கருத்தடை

யாழ்ப்பாணம், செப்.27

வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒன்றிணைந்த பங்களிப்பின்கீழ் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் ஊடாக யாழ். மாநகரசபையினரால் பெண்நாய்களுக்கான இலவச கருத்தடை சத்திரசிகிச்சை செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

அதன்படி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை பாஷை யூர் சிகிச்சை நிலையம், நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை முஸ்லீம் கல்லூரி வீதி, 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை அரியாலை கமநல சேவை திணைக்களம், 1ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை வண்ணார்பண்ணை, 2ஆம் திகதி வியாழக்கிழமை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை நல்லூர் ஆகிய இடங்களில் இந்தச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும். (ச-41)

# கடந்த அரசாங்கங்களின் ஆசியோடு நாட்டுக்குள் வந்த போதைப்பொருள்

## *அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு*

கொழும்பு, செப்.27

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள அதிகளவிலான போதைப்பொருள்கள் கடந்த அரசாங்கங்களின் ஆதரவோடு நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டவை. ஐஸ் தொழிற்சாலையும் கடந்த அரசாங்கங்களின் ஆதரவுடன் இயக்கப்பட்டதுதான் என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த நாடு ஆபத்தான கட்டத்தில் இருந்த போது நாட்டைப் பாரமேற்றோம். இப்போது நாடு முன்னேற்றப் பாதையை நோக்கிப் பயணிக்கிறது. நினைத்துப் பார்க்காத வகையில் கிலோக்கணக்கில் போதைப்பொருள்கள் பிடிபட்டுள்ளன. ஐஸ் தொழிற்சாலைகூட நடத்தி இருக்கிறார்கள். அதைக்கூடப் பிடித்துள்ளோம். கடந்த அரசாங்கங்களின் ஆதரவுடன் இந்த நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதைப்பொருள்கள் அவை. அரசாங்களின் ஆதரவு இல்லாமல் இந்தப் போதைப்பொருள்கள் நாட்டுக்குள் வந்திருக்காது இன்று சட்டம், பொலிஸ் எல்லாம் நியாயமாக சுதந்திரமாக செயற்படுகிறன. எமது அடுத்த பரம்பரை நிம்மதியாக வாழக்கூடிய போதைப்பொருள் அற்ற பாதாள உலகம் அற்ற பொருளாதார நிலையில் சக்திவாய்ந்த நாட்டை உருவாக்குவோம் - என்றார். (எ-75)

**காணி விற்பனைக்கு**

மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு

தொடர்பு: 077 794 8012

**வேலையாட்கள் தேவை**

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண் / பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 456 9678

**Win's Repair**

குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், AC பழுதடைந்துவிட்டதா ?
உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித்தரப்படும்.
தொடர்புகளுக்கு:
076 834 6136
(CS/59499) J-1

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு 2026
புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான
புதிய தரம்-06
தமிழ் மொழி மூல, English Medium
வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை
அனுமதி வழங்கப்படுகிறது
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 10 . 1939

மறைவு 24 . 09 . 2025

## கோமளாதேவி அருளானந்தம்

காரைநகர் பயிரிக்கூடலை பிறப்பிடமாகவும், கேகாலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கோமளாதேவி அருளானந்தம் அவர்கள் (24.9.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - தங்கமுத்துவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - தங்கமுத்துவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளானந்தம் (ரைக்ரர் ஆனந்தன்) அவர்களின் அன்பு மனைவியும், தயானந்தராஜா (தயா - அரச ஒப்பந்ததாரர், தவராணி(ராதா - கொலண்ட்), திருவருள்நாதன் (திரு - லண்டன்), விஜயானந்தராஜா (கண்ணன் - லண்டன்), விபில் ஆனந்தன் (வவி - கனடா), கலாராணி (கலா), கமலகரன் (கரன் - ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருச்செல்வம் (கொலண்ட்), செல்வராணி (செல்வி - லண்டன்), சியாமளா (வவா - இலண்டன்), கிருபாலினி (கனடா), குருபரன் (குரு - சங்கரத்தை), மெலனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், உதேஸ், சஹான் (கொலண்ட்) சுவிதா, சஜித் சுகித், சாரங்கி (லண்டன்), தக்சன், தஷ்வினி (லண்டன்), நயனிகா, துசானந் (கனடா), வேணுகன், தேவி, ஹாயா, ஹாப்ரியல் ஆகியோரின் பேத்தியும், காலஞ்சென்றவர்களான தையல்முத்து, கார்த்திகேசு மற்றும் பூமணி, பரமநாதன், பரிமளம், காலஞ்சென்ற கமலாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
0094771122693 - மருமகன் - குரு
0016477015973 - மகன் - வவி
0094776052386 - மகன் - தயா
44, புது வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (CS/59500) J-1

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு 23 . 06 . 1996

உதிர்வு 26 . 09 . 2025

## திருமதி நிருண் டர்சிகா

சுழிபுரம் மத்தியை பிறப்பிடமாகவும் உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நிருண் டர்சிகா அவர்கள் நேற்று (26.09.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஶ்ரீஸ்கந்தராசா - மைதிலி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தவலிங்கம் - புஸ்பகாந்தி தம்பதியரின் பாசமிகு மருமகளும், நிருணின் (நிரு மோட்டோர்ஸ், இணுவில்) அன்பு மனைவியும், அட்ஷரனின் பாசமிகு தாயாரும், நிதர்சனா, ஜிதுர்சன், லதீசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணிக்கு டச்சு வீதி, உடுவில் மேற்கு, உடுவிலில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

டச்சு வீதி,
உடுவில் மேற்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

CR 40361 A



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தி[illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 27.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org